இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 23-05-2023

# 2000 தவறுகள்

**கே**லிக்கூத்தான சம்பவங்கள் நடந்தால் அதனை 'துக்ளக் தர்பார்' என்று கிண்டல் செய்வது உண்டு. இனி வருங்காலம் 'மோடி தர்பார்' என்று கிண்டல் செய்யும் அளவுக்கு 2000 ரூபாய் பணத்தை வைத்து காமெடி செய்து கொண்டு இருக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கள்ளப்பணம் அதிகமாகி விட்டது என்று சொல்லி 1000 ரூபாய் நோட்டுகளை தடை செய்தார் பிரதமர். ஒன்பது ஆண்டுகள் கழிந்த பிறகும், 2000 ரூபாய் நோட்டை தடை செய்திருக்கிறார் என்றால் யாருடைய ஆட்சி இதற்குக் காரணம்?

2000 ரூபாய் நோட்டுகளை புழக்கத்தில் இருந்து திரும்பப் பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது. செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள் 2000 ரூபாய் நோட்டுகளை வைத்திருப்பவர்கள் வங்கிக் கணக்கில் செலுத்தி மாற்றிக் கொள்ளலாமாம்.

**இதே பிரதமர்தான் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நள்ளிரவில், 500, 1000 ஆகிய ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று அறிவித்தார். அதன்பிறகு 2000 ரூபாய் நோட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகம் செய்தது. கருப்புப்பணத்தை ஒழிக்கப் போவதாகச் சொல்லி 1000 ரூபாய் நோட்டை தடை செய்துவிட்டு, 2000 ரூபாய் நோட்டை அறிமுகம் செய்த புத்திசாலித் தனத்தை என்ன சொல்வது?**

2000 ரூபாய் நோட்டை அறிமுகம் செய்தார்களே.. அதையாவது முழுமையாகத் தொடர்ந்தார்களா என்றால் இல்லை. 2018 ஆம் ஆண்டு முதல் 2000 ரூபாய் நோட்டுகளை அச்சடிப்பதையே நிறுத்திவிட்டார்கள். அதைக் கண்ணில் பார்க்க முடியாத அளவுக்கு தடை போடப்பட்டுவிட்டது அப்போதே. ஏ.டி.எம். இயந்திரங்களில் கூட அதனைப் பார்க்க முடியாது. இந்த நிலையில் மொத்தமாக 2000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறும் நடவடிக்கையில் இறங்கி இருக்கிறார்கள்.

**2016 நடவடிக்கைக்கே இது வரை காரணம் தெரியவில்லை. 2023 நடவடிக்கைக்கு என்ன காரணம் இருக்க முடியும்? ஒரே காரணம்தான் ... உருப்படியாக எதையும் செய்யத் தெரியவில்லை என்பதால் எதையாவது செய்து கொண்டிருப்பதுதான் இது.**

2016 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் நள்ளிரவில் இது அறிவிக்கப்பட்டது. இது இந்தியாவின் இரண்டாவது சுதந்திர தினமாகச் சொல்லப்பட்டது. கருப்புப் பணத்தை ஒழிக்கவும், ஹவாலாவை ஒழிக்கவும், கள்ள நோட்டுகளைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை என்று சொல்லப்பட்டது. இந்தப் பணம்தான் போதை மருந்து வியாபாரத்துக்கும் தீவிரவாதத்துக்கும் பயன்படுத்தப் படுவதாகச் சொல்லப்பட்டது. ஒன்பது ஆண்டுகளில் கருப்புப் பணத்தை, ஹவாலாவை, கள்ள நோட்டுகளை, போதை மருந்துகளை ஒழித்துவிட்டதாகச் சொல்ல முடியுமா?

**2017 - முதல் இன்று வரை குஜராத் துறைமுகங்களில் கைப்பற்றப்பட்ட போதை மருந்துகளின் மதிப்பே பல்லாயிரம் கோடி ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் வடமாநிலங்களில் 300 சதவிகிதம் அதிகரித்துள்ளது. கடந்த 2021-ம் ஆண்டு மட்டும் சுமார் ரூ.21 கோடி மதிப்புள்ள கள்ள நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதிலும் குறிப்பாக 2000 ரூபாய் நோட்டுகள் மட்டும் 12 கோடி என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது. 2016-ஆம் ஆண்டுக்குப் பிறகு அதாவது பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகே கள்ள நோட்டுக்கள் அதிக அளவில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.**

2016 ஆம் ஆண்டு ரூ.15.92 கோடி மதிப்புடைய கள்ள நோட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ.28.10 கோடி, ரூ.17.95 கோடி, ரூ.25.39 கோடி, ரூ.92.17 கோடி மற்றும் 20.39 கோடி மதிப்புடைய கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு குஜராத்தில் ரூ.317 கோடி மதிப்பிலான கள்ளநோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. எதைச் சாதித்தது 2016 நடவடிக்கை?

**பணமதிப்பிழப்பு நடவடிக்கை குறித்து, ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்தது. உச்சநீதிமன்ற நீதிபதி கவாய் வழங்கிய தீர்ப்புக்கு நீதிபதிகள் அப்துல் நசீர், ஏ.எஸ்.போபண்ணா, வி.ராமசுப்ரமணியன் ஆகியோர் ஆதரவு தெரிவித்தார்கள். அதேநேரத்தில் நீதிபதி நாகரத்னா மட்டும் மாறுபட்ட தீர்ப்பை அளித்தார். "நிர்வாக நடைமுறைப்படி பணமுடக்கம் மேற்கொண்டது தவறு" என்று தனது தீர்ப்பில் தெரிவித்தார். "இது போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கும் போது நாடாளுமன்றத்தை ஒதுக்கி வைக்க முடியாது" என்றும் அவர் குறிப்பிட்டார். "24 மணி நேரத்தில் எப்படி முடிவு எடுக்கப்பட்டது?" என்று கேள்வி எழுப்பிய அவர், 'ஒன்றிய அரசின் பதிலுக்கும், ரிசர்வ் வங்கியின் பதிலுக்கும் அதிக முரண்பாடுகள் உள்ளதாகவும் தெரிவித்தார். "பணமதிப்பிழப்பால் பொதுமக்கள் பெரும் பொருளாதார இன்னல்களுக்கு ஆளாகினர்" என்றும் அவர் கூறினார். பணமுடக்கத்தின் நோக்கம் நிறைவேறவில்லை என்ற அவர், பணமதிப்பிழப்பு விளைவுகளை ரிசர்வ் வங்கி கவனத்தில் கொண்டதா என்று கேள்வி எழுப்பினார். ஒரு அரசாணை மூலம் 500, 1000 ரூபாய் நோட்டுகளை மதிப்பிழக்கச் செய்ததை ஏற்க முடியாது என்றும், பண மதிப்பிழப்பு அரசாணை சட்ட விரோதமானது என்றும் நீதிபதி நாகரத்தினா தெரிவித்தார். இவை அனைத்தும் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்தினா எழுப்பிய கேள்விகள்.**

**இதோ மீண்டும் அதே தவறு செய்யப்பட்டுள்ளது.**

**500 சந்தேகங்கள்!**

**1000 மர்மங்கள்!**

**2000 பிழைகள்!**

**கர்நாடக தோல்வியை மறைக்க ஒற்றைத் தந்திரம்"** - என்று இந்த நடவடிக்கை பற்றி விமர்சித்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். பா.ஜ.க.வின் வெற்றிப் பிம்பம் என்பது கர்நாடகா தேர்தல் முடிவுகளுக்குப் பின்னால் இற்று நொறுங்கி விட்டது. அதனைப் பற்றி யாரும் பேசி விடாமல் 2000 ரூபாயை தடை செய்வதன் மூலமாக அனைவரையும் இதைப் பற்றிப் பேச வைக்கும் தந்திரம்தான் இது.

சாணக்கியன் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போன தந்திரம்தான் இது. 'மன்னனுக்கு மறுநாள் காலையில் ஏதாவது ஒரு சிக்கல் வரப்போகிறது என்றால் முந்தைய நாள் இரவில் ஒரு மரத்தில் ஒருவனை ஏற்றி கூக்குரல் எழுப்பச் சொல். அச்சம் தரும் அந்த ஒலியைப் பற்றியே மக்கள் பேசிக் கொண்டிருப்பார்கள்' என்பது சாணக்கியன் சொல். அதனைத் தான் இப்போது பார்க்கிறோம்.

சந்தேகங்கள்... மர்மங்கள்... பிழைகள்... தப்பித்தல்கள்... திசை திருப்பல்கள்... ஆனால் இறுதியில் தோல்விகள்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் (பகிர்மானம்) சிவலிங்கராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 2,000 ரூபாய் நோட்டுகளை இன்று முதல் மாற்றிக் கொள்ளலாம்!

*மும்பை, மே 23 -*

*செப்டம்பர் மாதம் 30ந் தேதிக்கு பிறகு 2,000 ரூபாய் நோட்டு செல்லாது என்ற அதிரடி அறிவிப்பை பாரத ரிசர்வ் வங்கி கடந்த சில தினங்களுக்கு முன்பு வெளியிட்டது.*

*அதன்படி 2,000 ரூபாய் நோட்டு புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறப் படுவதாகவும் 2,000 ரூபாய் நோட்டுகள் வைத்திருப்போர் அவற்றை இன்று (23ந் தேதி) முதல் வங்கிகளில் செலுத்தி மாற்றிக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2,000 ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் செலுத்தி மாற்றிக் கொள்வதற்கு வரும் செப்டம்பர் மாதம் 30ந் தேதி கடைசி நாள் ஆகும். மேலும் ஒரு நபர் ஒரே நேரத்தில் 20 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 2,000 ரூபாய் நோட்டுகளை மட்டுமே வங்கிகளில் செலுத்தி மாற்றிக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.05.2023) தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்கு தனது சொந்த நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கருணை அடிப்படையில்

# 103 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை மே 23 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.5.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டில் தொழிற்துறை, விவசாயம், நகர்ப்புற மற்றும் ஊரக மேம்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியின் காரணமாக அதிகரித்து வரும் மின்தேவைக்கு ஏற்றவாறு மக்களுக்கு தடையின்றி மின்சாரம் கிடைக்க செய்யும் உயரிய நோக்குடன், தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்கள் அமைத்தல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களின் திறனை மேம்படுத்தும் விதமாக கூடுதல் மின் மாற்றிகள் அமைத்தல், சரியான மின் அழுத்தத்துடன் கூடிய சீரான மின்சாரம் வழங்குதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பணிகளை, தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் உயிரிழந்த 103 பணியாளர்களின் வாரிசுதாரர்களில், தொழில்நுட்ப உதவியாளராக 24 நபர்களுக்கும், இளநிலை உதவியாளராக (கணக்கு) 2 நபர்களுக்கும், மின் கணக்கீட்டாளராக 14 நபர்களுக்கும், தட்டச்சராக 1 நபருக்கும், களப்பணி உதவியாளராக 56 நபர்களுக்கும், உதவி வரைவாளராக 1 நபருக்கும், காவலாளியாக 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இயக்குநர் (பகிர்மானம்) சிவலிங்கராஜன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணையில் ஜீன் 12ந் தேதி தண்ணீர் திறப்பு!

*மேட்டூர், மே 23 -*

*சேலம் மாவட்டம் மேட்டூரில் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கம் எனப்படும் மேட்டூர் அணை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களின் பாசன ஆதாரமாக விளங்குகிறது. இந்த அணையின் மூலம் தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் உள்ள 17.37 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் இருந்து வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ந் தேதி குறுவை சாகுபடிக்காக நீர் திறக்கப்படும்.*

*டெல்டா பகுதி விவசாயிகள் இந்த நீரை நம்பியே குறுவை சாகுபடி செய்வர். கடந்த ஆண்டு மழையால் மேட்டூர் அணை நிரம்பிய நிலையில் ஜூன் 12ந் தேதிக்கு முன்பாகவே அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. மே மாதம் 24ந் தேதி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அணையில் இருந்து பாசனத்திற்காக நீரை திறந்து விட்டார்.*

*மேட்டூர் அணை வரலாற்றிலேயே, கோடை காலத்தில் டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்ட நிகழ்வு முதல் முறையாக நிகழ்ந்தது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. இந்த ஆண்டும் மேட்டூர் அணையிலிருந்து உரிய நாளான ஜூன் 12ந் தேதி டெல்டாவின் குறுவை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது.*




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.05.2023) சென்னை தலைமைச்செயலகத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மிதிவண்டி வீராங்கனை (Cycling) செல்வி ஷா. தபித்தா பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றிபெறுவதற்கு ஏதுவாக போட்டிகளுக்கென்று பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட மிதிவண்டி வழங்கினால் பல்வேறு சாதனைகளை படைத்து நமது மாநிலத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க முடியும் என கேட்டுக்கொண்டபடி தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, ரூபாய் 13.99 லட்சம் மதிப்பீட்டிலான Argon 18 PRO (Complete bike) – Competition Wheel Set, Mavic Front Five Spoke Wheel Set and Mavic Rear Disc Wheel set மிதிவண்டியை வழங்கினார். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலாளர் ஜெ.மேகநாதரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.